1பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
30 12 2024 **MONDAY** 6 45 **AM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. PSLV C-60 ராக்கெட் மூலம் இந்தியாவின் SDX-01 மற்றும் SDX-02 செயற்கைக் கோள்கள் இன்றிரவு விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

2. மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், புதுதில்லியில் இன்று வர்த்தக தொழில் துறையினருடன் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனை மேற்கொள்கிறார்.

3. வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று கத்தார் செல்கிறார.

4. தூத்துக்குடி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசு திட்டப் பணிகளை விரைந்து முடிக்குமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 340 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

>>>>><<<<<

விண்வெளியில் விண்கலங்களை இணைத்தல் மற்றும் பிரித்தல் தொடர்பான சோதனைகளுக்கான இந்தியாவின் SDX-01 மற்றும் SDX-02 ஆகிய இரண்டு செயற்கைக் கோள்கள் PSLV C-60 ராக்கெட் மூலம் இன்றிரவு மணி 9.58-க்கு விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்திஷ்தவன் விண்வெளி மையத்திலிருந்து செலுத்தப்படும் இந்த சிறிய வகை செயற்கைக்கோள்கள், பூமியிலிருந்து 470 கிலோமீட்டர் உயரத்தில் வெவ்வேறு சுற்றுவட்ட பாதைகளில் நிலைநிறுத்தப்படும்.

ராக்கெட் விண்ணில் செலுத்தப்படுவதை ஒட்டி, திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்க்குமாறு மீன்வளத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், புதுதில்லியில் இன்று வர்த்தக தொழில் துறையினருடன் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனை மேற்கொள்கிறார்.

வரும் நிதியாண்டுக்கான மத்திய அரசின் பட்ஜெட், வரும் பிப்ரவரி ஒன்றாம் தேதி தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில், அதில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் மற்றும் சலுகைகள் குறித்து அமைச்சர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

>>>>><<<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று கத்தார் செல்கிறார்.

இந்தப் பயணத்தின் போது, அவர் கத்தார் பிரதமரும் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சருமான திரு. ஷேக் முஹமது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாஸிம் அல்தானியை சந்தித்து இருதரப்பு உறவு குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

குறிப்பாக, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட பரஸ்பர நலன் சார்ந்த பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசு திட்டப் பணிகளை விரைந்து முடிக்குமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடி சென்ற முதலமைச்சர் நேற்று, உடன்குடி அனல்மின் நிலையப் பணிகள், சர்வதேச அறைகலன் பூங்கா, தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தனியார் பங்களிப்புடன் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.

இந்தப் பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு முதலமைச்சர், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அரசு துறைகள் பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய சேவைகளை விண்ணப்பம் பெறப்பட்டவுடன், உரிய காலத்தில் தாமதமின்றி வழங்கவும் அவர் அறிவுறுத்தினார்.

முன்னதாக, தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் போட்டி தேர்வுகளில் பங்கேற்பவர்களுக்காக நடத்தப்பட்டு வரும் படிப்படி வளாகத்தையும் முதலமைச்சர் பார்வையிட்டார்.

>>>>><<<<<

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, வெள்ளி விழா நிகழ்ச்சிகள் இன்று தொடங்குகின்றன.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த விழாவில், முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பங்கேற்று, விவேகானந்தர் பாறையை திருவள்ளுவர் சிலையுடன் இணைக்கும் கண்ணாடி இழை பாலத்தை திறந்து வைக்கவுள்ளார்.

மேலும், திருக்குறள் நெறி பரப்பும் 25 பேருக்கு சிறப்பு பரிசுகளையும் முதலமைச்சர் வழங்குகிறார்.

>>>>><<<<<

தமிழகத்தில் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் பதவிஉயர்வு மற்றும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, முதலமைச்சரின் செயலாளர் திரு. பி. உமாநாத், ஆளுநரின் செயலாளர் திரு. ஆர். கிர்லோஷ்குமார், திரு. டி.என். வெங்கடேஷ், திரு. ராஜேந்திர ரத்னு, திரு. ஆர். லால்வீனா ஆகியோருக்கு முதன்மைச் செயலாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளர் திரு. எஸ். கோபால சுந்தரராஜ் உள்ளிட்ட 18 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், தேர்வு நிலை அதிகாரிகளாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே, காவல்துறை கூடுதல் டி.ஜி.பி-க்களான திரு. மகேஷ்குமார் அகர்வால், திரு. ஜி. வெங்கட்ராமன், திரு. வினித் தேவ் வாங்கடே உள்ளிட்ட ஐந்து பேருக்கு டி.ஜி.பி-க்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதுக்கோட்டை, அரியலூர், கன்னியாகுமரி, திருப்பூர், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆஞ்சநேயர் ஜெயந்தி இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவிலில் இன்று அதிகாலையிலேயே கோவில்நடை திறக்கப்பட்டு, ஒரு லட்சத்து 8 வடை மாலை சாத்தப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் — நாமக்கல் 50 செகண்டஸ்)

>>>>><<<<<

புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையையொட்டி, வேளாங்கண்ணி மற்றும் கன்னியாகுமரிக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதன்படி, செகந்திராபாத்திலிருந்து, இன்று இரவு எட்டு மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் இரவு ஏழரை மணிக்கு வேளாங்கண்ணியை சென்றடையும், மறுமார்கத்தில் வேளாங்கண்ணியிலிருந்து வரும் ஒன்றாம் தேதி இரவு பத்து மணிக்கு இந்த சிறப்பு ரயில் செகந்திராபாத் புறப்படும்.

கர்நாடக மாநிலம் ஹுப்பள்ளியிலிருந்து, இன்றும் அடுத்த மாதம் 6 மற்றும் 13-ஆம் தேதிகளிலும் மாலை நான்கு மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் பிற்பகல் மணி 3.20-க்கு கன்னியாகுமரியை வந்தடையும்.

மறுமார்கத்தில் இந்த ரயில் கன்னியாகுமரியிலிருந்து, நாளையும், அடுத்த மாதம் 7 மற்றும் 14-ஆம் தேதிகளிலும் இரவு மணி 7.10-க்கு ஹுப்பள்ளி புறப்பட்டு செல்லும்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிமி கார்ட்டர், வயது முதிர்வு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று காலமானார். அவருக்கு வயது 100.

>>>>><<<<<

நாட்டில் உள்ள முக்கிய ரயில் வழித்தடங்களில் தானியங்கி ரயில் பாதுகாப்பு சாதனமான Kavach-4.0 பொருத்தும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் இந்த ஆண்டு கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் 60 சதவீதம் பேர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

போதைப் பொருட்களை தவிர்க்க வலியுறுத்தி, திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

>>>>><<<<<

காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வைரவிழாவை ஒட்டி நடைபெற்ற மாநில அளவிலான மாரத்தான் ஓட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

>>>>><<<<<

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தை அடுத்த கிளாங்குண்டல் யோக ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஹனுமன் ஜெயந்தியை முன்னிட்டு, பவளக்கொடி கும்மியாட்டம் அரங்கேற்றம் நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

மெல்போர்னில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் கடைசி நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்புக்கு 31 ரன் எடுத்துள்ளது.

இப்போட்டியில் இந்தியா வெற்றிபெற 340 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்த போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் இந்திய வீரர் பும்ரா, ஆஸ்திரேலியாவின் ட்ராவிஸ் ஹெட்டை வீழ்த்தி, டெஸ்ட் கிரிக்கெட்டில் 200வது விக்கெட்டை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

>>>>><<<<<

உலக Blitz Chess சாம்பியன் போட்டிகள் நியூயார்க்கில் இன்று தொடங்குகின்றன.

இதில், இந்தியாவின் பிரக்ஞானந்தா, அர்ஜூன் எரிகேஸி, கோனேரு ஹம்பி மற்றும் உலகின் முன்னணி வீரரான மேக்னஸ் கார்ல்ஸன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

சீனாவின் Shenzhen நகரில் நடைபெற்ற கிங் கோப்பை சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் லக்ஷயா சென் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில், அவர் சீனாவின் Hu Zhe'an-னிடம் தோல்வியடைந்து, மூன்றாம் இடம் பிடித்தார்.

>>>>><<<<<

மும்பை கடற்படை பள்ளியில் பயிலும் 12ஆம் வகுப்பு மாணவி Kaamya Karthikeyan உலகில் உள்ள உயரமான ஏழு மலைச் சிகரங்களை ஏறி, சாதனை படைத்துள்ளார்.

>>>>><<<<<

புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹரியானா வெற்றிபெற்றது.

புனேயில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்த அணி பாட்னா அணியை 32-23 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஜாம்ஷெட்பூர் அணி கேரள அணியை 1-0 என்ற கோல்கணக்கில் வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<